**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்.**

**முன்னிலை திரு.S.B. சுஜித், B.A. B.L.(Hons).,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இராமேஸ்வரம்**

2026 ம் வருடம் ஜுன் திங்கள் 08-ம் நாள் திங்கட்க்கிழமை

**C.I.S.Crl.M.P.No.280/2026**

**CNR NO. TNRM05-000840-2026**

காளீஸ்வரன் (வயது 18/2026)
த/பெ.கருப்பசாமி,
13C, கரையூர்,
இராமேஸ்வரம். . . . மனுதாரர்/எதிரி

-- எதிராக --

அரசுக்காக சார்பு ஆய்வாளர்,
துறைமுகம் காவல்நிலையம்,
இராமேஸ்வரம்.
குற்ற எண்.70/2026 . . . எதிர்மனுதாரர்/அரசு குற்ற முறையிடுபவர்

இந்த மனுதாரர்/எதிரி தரப்பில் மனுதாரர்/எதிரி எதிரியை பிணையில் விடுவிக்ககோரி B.N.S.S. பிரிவு 480-ன் கீழ் 05.06.2026 ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்ட இப்பிணை மனு இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/எதிரி தரப்பில் இலவச சட்ட உதவி மைய வழக்கறிஞர் திரு.M.நாகேந்திரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/அரசு குற்ற முறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-1 அவர்களின் பதில் மனு தாக்கல் செய்தும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் ......

**உ த் த ர வு**

இந்த மனுதாரர்/எதிரி மீது இராமேஸ்வரம் துறைமுகம் காவல்நிலைய குற்ற எண்.70/2026 ச/பி. 331(4), 305(a) BNS -ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம் :-</u>**

இந்த மீது இராமேஸ்வரம் துறைமுகம் காவல்நிலைய குற்ற எண்.70/2026 ச/பி. 331(4), 305(a) BNS-ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு இந்த மனுதாரர்/எதிரி கடந்த 07.05.2026 ம் தேதியன்று கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த மனுதாரர்/எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தில் மனுதாரர்/எதிரி எந்த விதமான குற்றமும் புரியாதவர் என்றும், கடந்த 33 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்றும் எதிரியை பிணையில் விடுவிக்கும் பட்சத்தில் நீதிமன்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடப்பார் என்று வாதிட்டார். மேலும், எதிரிக்கு பிணையம் அளிக்க பிணையதாரர்கள் தயாராக உள்ளார்கள் என்றும் எதிரியை பிணையில் விடக்கேட்டுக்கொண்டுள்ளார்.

**<u>அரசுத்தரப்பு பதிலுறையின் சுருக்கம் :-</u>**

இந்த மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிணை மனுவின் பேரில் அரசுத்தரப்பிற்கு அறிவிப்பு அனுப்பி பதில் பெறப்பட்டது. அந்த பதிலில் இவ்வழக்கின் புகார்தாரர் இராமேஸ்வரம் ஐஸ் பிளாண்ட் அருகே கடை வைத்து நடத்தி வருவதாகவும், கடந்த 01.05.2026 ம் தேதி 09.30 மணியளவில் புகார்தாரர் பெட்டி கடையில் வியாபாரம் செய்துவிட்டு ரூ.25,000/-ஐ கல்லா பெட்டியில் வைத்து விட்டு 02.05.2026 ம் தேதி காலை சுமார் 08.00 மணியளவில் கடையை திறந்து பார்த்தபோது கடையின் ஆஸ்பெட்டஸ் சீட்டின் மேற்கூறை உடைக்கப்பட்டு கல்லாப்பெட்டியில் இருந்து ரூ.25,000/- பணம் திருடு போய் உள்ளது என்று 02.05.2026 ம் தேதி புகார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டு எதிரி கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வழக்கில் எதிரி 07.05.2026 ம் தேதி முதல் இராமநாதபுரம் மாவட்ட சிறையில் இருந்து வருகிறார். எதிரிக்கு பிணை வழங்கினால் இதுபோன்ற குற்ற வழக்குகளில் தொடர்ந்து செய்யக்கூடும் என்பதாலும், நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராவதை தவிர்ப்பார் என்பதாலும், சாட்சிகளைக் களைக்க நேரிடும் என்பதாலும் பிணையில் விட கடுமையான ஆட்சேபனையை அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>தீர்வு:–</u>**

இருதரப்பும் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் மனு மற்றும் வழக்கு கோப்பு பரிசீலனை செய்யப்பட்டது. முடிவில், இவ்வழக்கின் ஆவணங்கள் மற்றும் அரசுத்தரப்பு ஆட்சேபனைகள் ஆகியவற்றை பரிசீலனை செய்யும்பொழுது, இம்மனுதாரர்/எதிரி கடந்த 07.05.2026–ம் தேதி முதல் 33 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். எதிரி மீது வேறு எந்த முன்வழக்குகளும் இல்லை. எதிர்மனுதாரர் தரப்பில் போலீஸ் காவலில் எடுப்பதற்கான மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. எதிரியை தகுந்த நிபந்தனைகள் மூலம் விசாரணைக்கு ஆஜர் ஆவதை உறுதி செய்ய இயலும் என்று தீர்மானிக்கிறது. எனவே, வழக்கின் சூழ்நிலைகள், எதிரியின் வயது மற்றும் குடும்ப சூழ்நிலைகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு எதிரியை பிணையில் விட முடிவு செய்து பிரிவு 480 BNSS படியான மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்</u>**

1. எதிரி தனக்காக இரு பிணையதாரர்களும் தலா ரூ.10,000/–க்கு பிணைப்பத்திரம் எழுதித்தரவேண்டும்.

2. எதிரி பிணையில் வெளிவந்த நாள் முதல் மறு உத்தரவு வரும் வரை துறைமுகம் காவல்நிலையத்தில் காலை 10.00 மணிக்கு முன்னிலையாகி தொடர்ந்து கையொப்பம் செய்து வரவேண்டும்.

3. எதிரி பிணையில் வந்தபிறகு எந்தவொரு குற்ற வழக்கு சம்பவத்திலும் ஈடுபடக்கூடாது.

4. காவல்துறையினர் புலன் விசாரணைக்கு அழைக்கும்போது எதிரி தவறாமல் ஆஜராகவேண்டும்.

5. நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரும் போது எதிரி தவறாமல் ஆஜராக வேண்டும்.

இன்று 2026ம் வருடம் ஜுன் திங்கள் 08–ம் நாள் செவ்வாய்க்கிழமை இவ்வுத்தரவு என்னால் இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

SUJITH
Digitally signed by SUJITH
Date: 2026.06.08 13:02:57 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.